# திருமூலர் தரும் குரு வழிபாடு



**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்**
**அவர்கள் அருளிய**

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

**ஆனி மாத வெளியீடு (June 2015 - July 2015)**
**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116**

காணிக்கை ரூ.10/-

மனித இனம் கண்ட முதல் மதம் இந்துமதம் எனப்படும் சித்தர் நெறியே.

# உள்ளுறை

1. திருமூலர் தரும் குருவழிபாடு.
2. சுடுகாட்டில் வழிபாடு செய்யும் பத்தி இயக்கம்.
3. தமிழர்களின் மறுசிந்தனைக்கு.
4. திருஞான சம்பந்தர் பிருமணரா? ஆரியரா? பார்ப்பனரா?
5. சைவ சித்தாந்த சாத்திரங்களே மெய்யான இந்துமத சாத்திரம்.
6. சந்தானுச்சாரியார் வரலாறு = மெய்யான இந்துமத வரலாறு.
7. உண்மையிலே இந்துமதத்தில் வீழ்ச்சி நிலையா?
8. இந்துமத எழுச்சி வாசகம்.

---

"..... ..... ஒரு வேளை நான் என்னுடைய மறுமலர்ச்சிப் பணி முயற்சியிலேயே அழித்தொழிக்கப்பட நேரிட்டால் நண்பர்களாகிய நீங்கள் அனைவரும் பெரிதும் முயன்று என்னுடைய எழுத்துக் குவியல்களை உலகெங்குமிருந்து திரட்டி பல தொகுதிகளாக வெளியிட்டிடல் வேண்டும். அதுவே நீங்கள் எனக்கும், என்னுடைய கொள்கைக்கும் ஆற்றிடும் பேருதவியாகும் என்பதைக் கூறிக் கொள்வதோடு இவ்வஞ்சலை முடிக்கின்றேன். .... ....."

*-- ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் எழுதிய அஞ்சலில் இருந்து எடுக்கப் பட்ட வாசகம்.*

# திருமூலர் தரும் குரு வழிபாடு

**'குரு'** என்ற சொல் தமிழ்ச் சொல்லே!

**'குருத்து'** = முளை, கருவின் வளர்ச்சி, ஆரம்பம்.

**'குருவி'** = பறவையினங்களில் ஆரம்பமானது, சிறியது, முதலானது.

**'குருகல்'** = ஒடுக்கமான, அடக்கமான, சிறிய குருத்தோலை = வளர்ச்சியின் ஆரம்ப நிலையில் உள்ள இளமையான, வளமையான இலை.

**'குரு'** = அனைத்து விதமான வளர்ச்சிகளுக்கும் ஆரம்பமாக உள்ளவர்.

பதினெண்சித்தர்களின் அருட்கொடை அனைத்திலும் தெளிவாக 'குரு போற்றல்', 'குரு வணக்கம்', 'குரு வழிபாடு', 'குரு வழி நிற்றல்' ....... என்ற எண்ணற்ற கருத்துச் சொற்கள் காணப்படுகின்றன.

**'குருவில்லா வித்தை பாழ்'**, **'குரு தொட்டுக் காட்டாதவை சுட்டுப் போட்டாலும் வாரா'** .... என்ற மூதுரைகள் எண்ணற்று உள்ளன. இப்படி பதினெண்சித்தர்களால் வலியுறுத்தப்படும் குருவழிபாட்டை 'நவநாத சித்தர்களில்' ஒருவரான 'திருமூலர்' பரம்பொருளான சிவனை கூட வணங்க வேண்டாம்; குருவை வணங்கி வழிபட்டு ஏற்றுப் போற்றி இரண்டறக் கலந்தால் மெய்ஞ்ஞான சித்தியெல்லாம் கைவரப் பெறலாமென்று பாடுகிறார்.

**சிவனை வழிபட்டார் எண்ணிலி தேவர்கள்**
**அவனை வழிபட்டங்கு ஆமாறு ஒன்றில்லை**
**அவனை வழிபட்டங்கு ஆமாறு காட்டும்**
**குருவை வழிபடில் கூடலும் ஆமே.**

\- திருமூலர் திருமந்திரம்

இவரே இன்னொரு பாடலில் "எப்படி இரசவாதம் கற்றவன் மட்டமான உலோகங்களையும் உயர்ந்த பொன்னாக்கித் தருகின்றானோ! அப்படியே குருதேவர் எத்தகைய மனிதரையும் ஆணவம், *பிறப்பு (*கன்மம், சன்மம்), மாயை எனும் மும்மலங்களும் நீங்கப் பெற்ற பிறப்பிறப்பற்ற பெரியோனாக மாற்றித் தருவார்" ...... என்று கருத்துப் பட பாடியுள்ளார்.

**பரிசன வேதி பரிசித்த தெல்லாம்**
**வரிசை தருபொன் வகையாகு மாபோல்**
**குருபரி சித்த குவலயம் எல்லாம்**
**திரிமலம் தீர்ந்து சிவகதி யாமே.**

- திருமூலர் திருமந்திரம்

இத் திருமூலர் தமது தலைவனான குருதேவரின் பெருமையை அல்லா, இறை, இயவுள், கடவுள், பரம்பொருள் ..... என்றெல்லாம் குறிப்பிட்டு உணர்த்துவதை விட அழகாக, விளக்கமாக, அடக்கமாக .....

**ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை**
**ஆரறிவார் அந்த அகலமும் நீளமும்**
**பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்**
**வேரறி யாமை விளம்புகின் றேனே.** (அவையடக்கம்)

- திருமூலர் திருமந்திரம்

இவர் மிகச் சிறந்த தமிழ்ப் பற்றாளர். பதினெண்சித்தர்களின் தாய்மொழி, இந்துமத மூல மொழி, அருளுலக ஆட்சி மொழி, அமுதமொழி ...... என்று தமிழை அடுக்கடுக்காகப் போற்றிக் கொண்டிராமல் தமது தமிழ்ப் பற்றை வெளிப் படுத்துகின்றார்.

**பின்னைநின்று என்னே பிறவி பெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.**

- திருமூலர் திருமந்திரம்.

'எல்லாம் வல்ல இறைவன் தன்னைப் பற்றி அறியவும், தன்னை அடையவும், தன் அருளைப் பெறவும் ..... தமிழ்மொழியையே பூசை மொழியாக, மத மொழியாக, அருள் மொழியாகப் பயன்படுத்த வேண்டும் இவ்வுலகத்தார்' என்ற பேருண்மையை விளக்கவே திருமூலர் படைக்கப் பட்டார் என்று விளக்கப்படுகிறது.

"தமிழே தெய்வ மொழி", "தமிழே தேவமொழி", "தமிழே கடவுள் மொழி", "தமிழே இறைமொழி", "தமிழே பத்தி மொழி", "தமிழே சத்தி மொழி", "தமிழே சித்தி மொழி", "தமிழே முத்தி மொழி" ...... என்ற பேருண்மை விளங்குகிறது இப்பாடலால்.

நவநாத சித்தரான திருமூலர், "மனித வாழ்வு மிகமிக அற்பமானது என்பதை ஒவ்வொரு மனிதனும் எண்ணிப் பார்த்திட்டால் ஆசை, ஆணவம், அகம்பாவம், வீம்பு, போட்டி, பொறாமை, பெருமை ...... முதலியவைகளை யெல்லாம் விட்டொழித்து விட்ட மெய்யான குருவைச் சார்ந்தொழுகிப் பொய்யுலக மாயைகளை வென்றிடுவர்" என்ற கருத்தை விளக்க மனித வாழ்வைச் சில பாடல்களில் வெகு நுட்பமாகச் சித்தரிக்கிறார்.

**அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்**
**மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்**
**இடப்பக்கமே இறை நொந்ததே என்றார்**
**கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.**

- திருமூலர் திருமந்திரம்.

மனைவி நன்றாகச் சமைத்து வைக்க மூக்குப் பிடிக்க உண்ட கணவன், தனது காமப்பசி தீர அவளை அநுபவித்தான். வாழ்வு

கழிந்திட ஒருநாள் இடப்பக்கம் வலிக்கிறது என்றான். உடம்பைத் தரையில் கிடத்தி ஓய்வெடுக்கலாம் என்றான். அவ்வளவுதான் அவன் மாண்டான் - படுத்தவன் எழவே இல்லை - செத்தொழிந்தான். இவன் சத்தாகச் செய்தது ஏதாவது உண்டா? குருவைத் தேடிச் சேர்த்த அருட்சொத்து உண்டா?

**நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்**
**காட்டுச்சிவிகை ஒன்று ஏறிக் கடைமுறை**
**நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட**
**நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.**

- திருமூலர் திருமந்திரம்

நாட்டிலே பெரிய பதவியும், சிறந்த புகழையும், விரிந்த செல்வத்தையும் உடையவனே நம் ஊர்த் தலைவன். இவன் முத்துச் சிவிகை ஏறிப் புறப்பட்டால் இவனுக்கு முன்னே ஆடல் பாடல் கூட்டங்கள் போகும், இவன் பின்னே ஊர்ப் பெரியவர்கள் எல்லாம் செல்வார்கள்.

ஆனால், இன்று இவன் இறந்ததால், காட்டு மரத்தால் கட்டிய பாடையில் தூக்கிச் செல்லப்படுகிறான். இவனுக்கு முன்னால் போனவர்கள் எல்லாம் அழுதபடி பின்னால் போகின்றார்கள். **இவனுடைய இந்தப் பயணத்தின் உண்மையான மெய்ப் பயணம் ஆருயிர், ஆவி, ஆன்மா என்ற மூன்றும் மேற்கொள்ளும் பயணம்தான்**. அப்பயணம் வெவ்வேறு திசைகளில், வெவ்வேறு வகையான, வேறுபட்ட முடிவுகளைப் பெறச் செல்லும் பயணங்களாகிடும். அம்மூன்றுக்கும் தக்க மெய்ஞ்ஞான குருவின் வழி பெற்ற சத்தி சித்திகளே வழித்துணையாக, வழிகாட்டியாக அமையும். குருவில்லாதவனின் இப்பயணங்கள் குருடனின் பயணங்களாகவே ஆகிடும்.

சிவிகை ஏறிச் செல்லும் பெருந்தலைவனுக்கும் பிறர் தூக்கிச் செல்ல இறுதிப் பயணம் செல்ல நேரிடும். அப்பயணம் நல்ல பயணமாக அமைந்திடச் சற்குருவை அடைந்திடல் வேண்டும். குருவழி நிற்பவனே, இறப்பின் அச்ச கூச்ச இச்சை மாச்சரிய ஆச்சரியங்களை வெல்ல முடியும். இதனை எண்ணிப் பார்த்துக் குருவை 'குரங்குக் குட்டி தனது தாய்க் குரங்கை இறுகப் பற்றிக் கொள்வது போல்' விடாமல் அடியொற்றிப் பற்றி வாழ்ந்திடுக!

குருவே இறந்துபட்ட மாணுக்கனின் உடல் எரிந்து சாம்பலாகி நீரில் கரைக்கப்பட்ட பிறகும்; அல்லது புதைக்கப்பட்ட ஐம்பூத உடல் மக்கி மண்ணோடு மண்ணாகி விட்ட பிறகும்; அவனைப் பற்றிக் கவலைப்பட்டு அவனுடைய ஆருயிர், ஆவி, ஆன்மா .... மூன்றும் துன்புறாமல் இன்புறுவதற்கு உரிய வழிவகைகளை ஆராய்ந்து, உரிய தோதுக்களையும், ஏதுக்களையும் செய்திடுவார்.

ஆனால், மனிதன் வாழும் போது அவனது உடலுக்குச் சொந்தம் பாராட்டும் பெற்றோர், உடன் பிறந்தார், மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், தோழர்கள் ..... முதலிய அனைவருமே அவன் இறந்தவுடனேயே அவனைப் "பிணம்" என்று அழைத்து, அஞ்சி, விரைந்து புதைத்தோ, எரித்தோ ஈமச் சடங்குகளை முடித்து நீராடி அவனை மறக்க முயன்றிடுவர்.

இவற்றை எண்ணிப் பார்ப்பவர்களே! இப்பிறப்புக்கு முன் தான் அனுபவித்த வாழ்வுகளையும்; இனிமேல், இப்பிறப்புக்குப் பிறகு தான் அனுபவிக்கப் போகிற வாழ்வுகளையும்; இப்பிறப்பில், தனது வாழ்வியலில் உள்ள இன்ப துன்ப அவலக் கேவல மாயைகளையும், தொல்லைகளையும் பற்றிய பேருண்மைகளைத் தகுந்த குருவிடம் அணுக்கத் தொண்டாற்றியும், அடங்கியொடுங்கிப் பழகியும், அனைத்தையும் முழுமையாகக் காணிக்கையாக்கியும், தன்னுணர்வு அற்றுக் குருவோடு இரண்டறக் கலந்தும் ..... உணர்ந்து கொள்ளுவார்கள்.

மற்றவர்கள் குருவைப் பெற்றாலும் கற்பாறை மேல் வீசியெறிந்த மண்பாண்டம் போல் குருவின் உறவைச் சிதறடித்து, பதறப் பதறப் பாழும் வாழ்வை வாழ்ந்து முடித்து, அருவுருவாய்க் கதறிக் கதறி வாழ்ந்திடுவர்.

இந்த இழிநிலை எவருக்கும் வந்துவிடக் கூடாது என்பதற்காக நவநாத சித்தரான திருமூலர், மற்ற நவநாத சித்தர்களான யக்ஞவல்லியர், எண்கோண மேனியான், வால்மீகிகள், கம்பர்கள், இராமதேவர், சனகதேவர், இராவண தேவர், வசிட்ட தேவர், விசும்பாத்திர தேவர், கண்ண தேவர், தன்வந்திரி தேவர், வியாசர்கள், பெருந்தேவனார்கள், திருவள்ளுவர் ....... முதலானோர் போன்று மானுட வாழ்வியலை நுட்பமாக விளக்குகிறார்.

**ஊரெல்லாம் கூட்டி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு**
**சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.**

- திருமூலர் திருமந்திரம்

என்று ஒருவன் இறந்ததும் நடக்கின்ற சமுதாயச் சடங்குகளை அழகிய வண்ண ஓவியமாக தீட்டித் தருகிறார் திருமூலர்.

இந்த அளவு குருவழிபாடு பற்றிச் சிறப்பாக நூல்கள் செய்த திருமூலரைப் பலரும் குருவாகப் போற்றுகிறார்களே தவிர, இவருடைய உண்மையான வரலாற்றைப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரியம் எப்படி கூறுகிறது என்பதை அறியவோ, அறிந்ததை அறிவிக்கவோ முன் வருவார் யாருமில்லை.

**//இதன் மூலம்: அச்சிட்ட குருதேவர் அறிக்கைகள் 16 மற்றும் 18 ஆகியவற்றில் இதே தலைப்பில் வெளியாகிய கட்டுரை.//**

# <u>சுடுகாட்டில் வழிபாடு செய்யும் பத்தி இயக்கம்</u>

இந்தியா முழுவதுமுள்ள ‘**இந்துமதம்**’ கங்கைக் கரையிலோ, யமுனைக் கரையிலோ, இமயத்திலோ பிறந்து தெற்கு நோக்கி வந்ததல்ல! தென்னிந்தியாவில் திராவிட நாட்டில் கடலுள் மறைந்த தமிழகத்தில், ... பிறந்த **இந்துமதமே** வடக்கேயும், மேலைய நாடுகளிலும், கீழைய நாடுகளிலும் பரவிற்று.

**இந்துமத**த்தின் முழுமுதற் கடவுள் சிவன், அவன் துணைவி சத்தி, மகன்கள் குமரன், விநயகர், (கணபதி, பிள்ளையார்), மைத்துனர் திருமால், அவர் துணைவிகள் திருமகள், நிலமகள், மகன் பிறமண், மனைவி கலைமகள், மகன் நாரதர், ஐயப்பன் எனப்படும் கடவுள்கள் தென்னாட்டவர்களே! இவர்கள் பேசியது தமிழே!

மேற்படி இந்துமதம் பத்தி இயக்கமாக, அதாவது ஏட்டுச் சுரைக்காயாகத் தத்துவ வடிவிலிருந்த இந்துமதம் செயல் வடிவில் சித்தாந்தமாக மாறிய போது; அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் நிகழ்ந்தன. இவற்றின் அடிப்படையில் தோன்றிய அறுபத்து மூன்று நாயன்மார்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும் பத்தி இயக்க வடிவமும் வாழ்வும் ஆவார்கள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் முதல்வரான <u>காரைக்காலம்மையார் பேய் வடிவம் பெற்றார்</u> என்று குறிக்கப் படுகின்றது. பன்னிரண்டு ஆழ்வார்களில் முதல் மூவரும் இயற்பெயரே தெரியாதவாறு <u>‘பொய்கையார்’, ‘பூதத்தார்’, ‘பேயார்’ (பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்) என்றே அழைக்கப் படுகிறார்கள்</u>.

இவற்றின் பொருளென்ன?

இப்படிச் சைவ சமய எழுச்சியின் மூலவரும், வைணவ சமய எழுச்சியின் மூலவரும் சுடுகாட்டுக்குரிய பேயாக, பூதமாக, பொய்யுருவாக (அருவம்) மக்களால் கருதப் பட்டது ஏன்?

இம்மூவரும் **சுடுகாடே இறைவன் திருநடனமிடும் மன்றம்** என்று கண்டுணர்ந்து கூறினர்கள். **'கல்லறைகளே இறையருள் ஊற்றெடுக்கும் கருவறைகள்'** என்ற பேருண்மையை வெளிப்படையாகக் கூறியவர்களே மேற்படி மூவரும்.

<u>சித்தர்கள் மனிதன் கடவுளாகிச் சமாது ஆகின்ற கருவறைகளேயே அருள் ஊற்றுக்களாக மாற்றினர்கள்</u>. எனவேதான், சித்தர் நெறி சுடுகாடு, புதைகாடு, இடுகாடு, நன்காடு, படுகாடு, விடுகாடு, ... என்று 18 வகைக் காடுகளிலும் பூசைகளைச் செய்து அருளை அனுபவப் பொருளாகப் பெறுவதையே பத்தி இயக்கமாக 'இந்து மறுமலர்ச்சி இயக்கமாக'க் காலங்கள் தோறும் செயல்வடிவம் பெறச் செய்துள்ளார்கள்.

<u>**'ஆரம்பமே முடிவு'**</u>, <u>**'முடிவே ஆரம்பம்'**</u>, <u>**'ஆதியந்தமற்ற பொருளே இறைவன்'**</u> என்ற தத்துவத்தைக் காரைக்காலம்மையாரும், பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும், பேயாழ்வாரும், ..... சுடுகாட்டுப் பூசைகளின் மூலம் இந்துமத மறுமலர்ச்சிப் பணியை அணி பெறச் செய்தனர்.

**//இதன் மூலம்: அச்சிட்ட குருதேவர் அறிக்கை 24இல் வெளியாகிய கட்டுரை.//**

# தமிழர்கள் மறுசிந்தனைக்கு ...

இன்றைய நிலையில் உலகெங்குமுள்ள தமிழர்கள் தங்களைப் பற்றிய மறு சிந்தனையில் ஈடுபட வேண்டியவர்களாக உள்ளார்கள். ஏனெனில், உலகெங்கும் தமிழர்கள் இழிவையும், பழியையும், சீரழிவையும், அழிவையும் அடைந்து வருகிறார்கள்.

தமிழர்கள் மதங்களின் பெயராலும், கட்சிகளின் பெயராலும், சாதிகளின் பெயராலும், வட்டாரங்களின் பெயராலும் தனித்தனிக் கூட்டங்களாகப் பிரிந்து கிடக்கின்றார்கள். இக் கூட்டங்கள் ஒன்றோடொன்று வெறுப்பும், மறுப்பும், எதிர்ப்பும், பகையும், போட்டியும், பொறாமையும், சண்டை சச்சரவுகளும் வளர்த்துக் கொண்டே இருக்கின்றன. அதாவது யாருக்கு பதவி? யாருக்குத் தலைமை? யாருக்குப் புகழ்? ......... என்ற வெறியாட்டமே இக்கூட்டங்களுக்கிடையே நிகழ்ந்து வருகின்றன.

எனவேதான் தமிழ் மொழிப் பற்று, மொழியறிவு, மொழியுணர்வு, மொழியார்வம், மொழியாற்றல், தமிழின ஒற்றுமை, தமிழினப் பற்று, தமிழன உரிமை, தமிழினப் பெருமை, தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, தமிழர் இலக்கியம், தாய்நாட்டுப் பாசம் ......... முதலியவை முளையிலேயே கருகியும், நோயுற்றும் உள்ளன. இவற்றை உடனடியாக நலப்படுத்திட, வளப்படுத்திட, வலிமைப் படுத்திட வேண்டும். சிந்தியுங்கள்.

தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு என்ற முக்கோணக் கோட்டை மீண்டும் புதிதாகக் கட்டப்பட வேண்டும். இதற்காகத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம் என்ற முக்கோண வயலை நாற்றங்காலாக்கித் தமிழரின் சமயத் தத்துவமான இந்துமத வித்துக்களை விதைத்து நாற்றுக்கள் தயாரிக்க வேண்டும். இவை, முதலில் தமிழ் நாட்டுக்குள் நடப்பட்டு விளைச்சலை அறுவடை

செய்ய வேண்டும். அது கண்டு, தென்னிந்தியா, இந்தியா, ஆசியா, கீழைய நாடுகள், மேலைய நாடுகள்... ..... என்று படிப்படியாக உலகம் முழுவதும் இந்து மத வித்துக்களின் நாற்றுக்கள் நடப்பட்டு அருட்பயிர் விவசாயம் நிகழ வேண்டும். அந்த விவசாய அறுவடைப் பயனே சமத்துவம், சகோதரத் தத்துவம், உலகப் பொதுவுடமை, உலகக் கூட்டுறவு, உலகச் சமாதானம் ....... முதலியவைகளாக இருக்கும்.

தமிழர்களின் தத்துவமே **இந்துமதம்**. இந்த **இந்து** என்ற சொல் தமிழ்ச் சொல்லே. **இந்து** என்றால் தமிழ், தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம், தமிழ் வாழ்வியல், உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு, உலகச் சமத்துவம், உலகப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் ...... என்றுதான் பொருள். *ஹிந்து* என்ற சொல் ஆரியரின் சொல். இது குறிக்கும் வடஆரிய வேதமதம் கற்பனைகள், புளுகுகள், ஆபாசங்கள், மடமைகள், ஏமாற்றுக்கள், சுரண்டல்கள், முதலாளித்துவங்கள் ....... முதலிய அனைத்தும் உடையது. எனவே, **ஒவ்வொரு தமிழனும்**, **‘தனது மதம் இந்து மதம்’**, **‘இம்மதம் ஒரு சமூக விஞ்ஞானம்’**, **‘இம்மதம் ஒரு பகுத்தறிவு மதம்’** என்பதை உணர வேண்டும்.

**இந்து மதத்தால்தான் தமிழர்கள் மொழியுணர்வும், இன உணர்வும், நாட்டுணர்வும் பெற்று ஒற்றுமை பெற்றிடச் செய்ய முடியும்! முடியும்! முடியும்!** எனவே அனைவரும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும் என அழைக்கின்றோம்.

**//இதன் மூலம்: அச்சிட்ட குருதேவர் அறிக்கை 22இல் ‘குருதேவரின் வணக்கவுரை’ என்ற தலைப்பில் உள்ள கட்டுரை.//**

## கேள்வியும் நானே...! பதிலும் நானே...!

# திருஞான சம்பந்தர் பிருமணரா? ஆரியரா? பார்ப்பனரா?

வடமொழிக்கும், பிருமணருக்கும், ஆரிய மதத்துக்கும், பார்ப்பனச் சனாதன தருமத்துக்கும் ஆதரவாளராக விளங்கிய பல்லவர்களையே நிலைகுலையச் செய்த திருஞானசம்பந்தர்; சீர்காழித் தமிழ் அந்தணர், குருக்கள், சிவாச்சாரியார் ஆகிய சிவபாத இருதயர் என்பவரின் மகனாகக் கருணீக சைவவேளாளர் குடும்பத்தில் தோன்றியவரே ஆவார். இவருடைய பெயர் "ஆளுடைய பிள்ளை", "திருஞானசம்பந்தம் பிள்ளை", "சீர்காழிப் பிள்ளை" ..... என்று சித்தர் நெறிப்படி தமிழர்க்கே உரிய சிறப்புப் பட்டப் பெயரால் அழைக்கப் படுகிறார்.

அதாவது, திருநாவுக்கரசு வேளாளர், திருநாவுக்கரசுச் சைவன், சுந்தரம் பிள்ளை, சுந்தர வேளாளர், சுந்தரச் சைவன், திருஞான சம்பந்தாச்சாரியார், திருநாவுக்கரசாச்சாரியார், சுந்தராச்சாரியார் என்று தேவாரம் பாடிய மூவரும் குறிக்குப்படும் மரபே இவர்களைத் தமிழர் என்று விளக்குகின்றன.

பெரிய கோயில் தில்லையம்பதி அருகேயுள்ள திருநாரையூர்ப் பிள்ளையார் கோயில் ஆண்டி மகன், பண்டாரம் மகன், பூசாறி மகன், சிவாச்சாரியார் மகன், தமிழ் அந்தணன் மகன், அருட்பா காத்த நம்பி ..... என்று பாராட்டப்படும் சைவ வேளாளன்

நம்பியாண்டான் நம்பி தனது அருள் சமத்துவப் பொதுவுடமை நிலைகளை எல்லாம் கடந்த தனது குல முதல்வனான சீர்காழிப் பிள்ளை சிவபாத இருதயரின் மகன் திருஞான சம்பந்தம் பிள்ளையை “ஆளுடைய பிள்ளை” என்று தமிழ்ச் சாதிப் பெயரால் பாராட்டுகிறான்.

இந்த நம்பியாண்டான் நம்பி சைவத் திருமுறைகளைத் தொகுத்ததால்தான் பிறமணர்களின் எதிர்ப்பையும் மறுப்பையும் வென்று 1. திருமூலர், 2. மாணிக்கவாசகர், 3. திருமாளிகைத் தேவர், 4. சேந்தனார், 5. கருவூர்த் தேவர், 6. பூந்துருத்தி நம்பி, 7. காடவ நம்பி, 8. கண்டராதித்தர், 9. திருவாலியமுதனார், 10. புருடோத்தம நம்பி, 11. சேதிராயர், 12. திருவாலவாயுடையார், 13. காரைக்காலம்மையார், 14. ஐயடிகள் காடவர் கோன், 15. சேரமான் பெருமாள் நாயனார், 16. நக்கீர தேவர், 17. கல்லாட தேவர், 18. கபில தேவர், 19. பரண தேவர், 20. இளம்பெருமானடிகள், 21. அதிராவடிகள், 22. திருவெண் காட்டடிகள் ..... முதலிய தமிழர்களின் போதனைகளும் சாதனைகளும் ..... நிலையான வாழ்வைப் பெற்றுத் திருமுறைப் பட்டியலில் இடம் பெற்றனர்.

நம்பியாண்டான் நம்பிக்குத் தனது பூசாறி குலத்துக்கு, ஆச்சாரிய குலத்துக்கு, தமிழ் அந்தண குலத்துக்கு, சைவ வேளாளர் குலத்துக்குப் பெருமை தரும் மூலவராக, முதல்வராக, இளைஞரான திருஞான சம்பந்தம் பிள்ளை திகழ்வது குறித்து பூரிப்பும், பெருமிதமும் அளவற்று ஏற்பட்டன. அதனாலேயே, அவர் பாடிய பத்து நூல்களில் ஆறு நூல்கள் திருஞான சம்பந்தம் பிள்ளையைப் பற்றியனவாகவே அமைந்தன.

1. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
2. ஆளுடைய பிள்ளையார் திருச்சபை விருத்தம்
3. ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை
4. ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை
5. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

6. ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

எனும் இந்த ஆறுநூல்கள் திருஞான சம்பந்தர் “பிள்ளை” எனப்படும் தமிழ் அந்தணரே! சைவ வேளாள மரபினரே! பூசாறியே! ஆச்சாரியே! என்ற பேருண்மையை விளக்குகின்றன.

7. திருநாவுக்கரசர் ஏகாதசமாலை
8. திருநாரையூர் விநயகர் திருவிரட்டை மணிமாலை
9. கோயில் திருப்பண்ணியர் விருத்தம்
10. திருத்தொண்டர் திருவந்தாதி - ஆக மீதி நான்கு நூல்கள்.

இம் மாபெரும் பேருண்மைகளை விளக்கும் வண்ணமே காலடி ஆதிசங்கராச்சாரியார் தமது “சௌந்தர்ய லகிரியில்” 75வது சூத்திரத்தில் திருஞான சம்பந்தரையும் தன்னையும் திராவிடசிசு என்று குறிக்கிறூர். - இவை போதும் **திருஞான சம்பந்தர் ஒரு தமிழரே** (பிருமணர் அல்ல) என்பதை விளக்கிட.

**//இதன் மூலம்: அச்சிட்ட குருதேவர் அறிக்கை 23இல் இதே தலைப்பில் வெளியான கட்டுரை.//**

“... ... ஆரியர்களின் வேதங்களும், வேத கால நாகரீகங்களும் அவர்கள் இந்தியாவிற்கு வந்து நிலையாக வாழ ஆரம்பித்து இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்களின் நாகரீகங்களையும், பண்பாடுகளையும், இலக்கியங்களையும் பார்த்துப் பழகிப் புரிந்து கொண்ட பிறகு உருவாக்கப் பட்டவையேயாகும். அதாவது தமிழர்களின் பண்பாடு ஈன்றெடுத்ததே “திராவிடப் பண்பாடு”. அத் திராவிடப் பண்பாடு ஈன்றெடுத்ததே “ஆரியப் பண்பாடு”. இவையிரண்டும் மீண்டும் ஒன்றோடொன்று கலந்து உருவாகியதே ‘இந்தியப் பண்பாடு’. அந்த இந்தியப் பண்பாடு [கிரேக்கர், அரேபியர்] யவனர், சோனகர், மங்கோலியர், குசானர், ஆங்கிலேயர் முதலியோரின் பலரின் பண்பாடுகள் முடிந்த அளவு இந்தியப் பண்பாட்டில் கலந்து உருவாகியதுதான் இன்றைய இந்தியப் பண்பாடு.... ....”

*-- ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்கள் எழுதிய அஞ்சலில் இருந்து எடுக்கப் பட்ட வாசகம்.*

# சைவ சித்தாந்த சாத்திரங்களே மெய்யான இந்துமத சாத்திரம்; பதினெண்சித்தர்களின் "சீவநெறி" எனும் இந்துமத விளக்கம்.

## [சீவநெறி => சிவநெறி => சைவநெறி]

### ஞாலகுரு சித்தர் கருவூராரால் எழுதப்பட்டு வரும் இந்நூலின் முன்னுரையில் ஒரு பகுதி

அருள்நந்தி சிவாச்சாரியாரைப் பற்றிப் பல ஆயிரம் பக்கங்களில் வரலாற்று நூல்களை எழுதினாலும் கூட அவருடைய அருமை பெருமைகளைப் பற்றியும், சாதனை போதனைகளைப் பற்றியும் முழுமையாக எழுதி முடித்த நிறைவு யாருக்குமே வராது. ஏனென்றால், ஆற்று நடுவில் உள்ள மணற்கேணியில் இறைக்க இறைக்க தண்ணீர் ஊறுவது போல; அருள்நந்தி சிவாச்சாரியாரின் வரலாற்றை எழுத எழுத தமிழகத்துக்கும், தமிழினத்துக்கும் பொற்காலமான, அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசின் பல்வேறு வகையான துறைகளின் நிலைகளைப் பற்றிய செய்திகள் வந்து கொண்டேயிருக்கும், வந்து கொண்டேயிருக்கும், வந்து கொண்டேயிருக்கும்.

அதாவது பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமத**த்தின் காலக் கணக்கீட்டு அடிப்படையில் பார்த்தால் 'கடலுள் மறைந்த' இளமுறியாக்

கண்டமெனும் குமரிக் கண்டத்துத் தமிழகத்தில் இருந்து; கி.பி.785இல் முதல் விசயாலயன் பட்டமேறிய நாள் வரை உள்ள 43,71,000 ஆண்டுகளுக்கு உரிய தமிழகத்தின் உயர்ச்சி நிலைகளை எல்லாம் கி.பி.785 முதல் கி.பி. 1279 முடிய வாழ்ந்த அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசின் காலச் சாதனைகளில் காண முடிகின்றது. இதற்கெல்லாம் காரணம் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களும், அவரது மகனான கருவூர்த் தேவர் அவர்களும், பேரனான திருமாளிகைத் தேவர் அவர்களுமே ஆகும்.

இருந்த போதிலும் இம்மூவரும் முழுக்க முழுக்க வடஆரியர்களோடு போரிட்டுக் கொண்டே இருந்த புரட்சிவாதிகளாகவும் இருந்திட்டனர் என்கின்ற காரணத்தினால், இவர்கள் நாதமுனியைக் கொண்டு ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்தும்; திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி அவர்களைக் கொண்டு நாயன்மார்களின் பாடல்களைத் தொகுத்தும்; பல இலக்கிய ஆசிரியர்களையும், இலக்கண ஆசிரியர்களையும் கொண்டு பல இலக்கிய இலக்கணங்களைத் தொகுத்தும்; பல உரையாசிரியர்களைக் கொண்டு பழம்பெரும் இலக்கிய இலக்கணங்களுக்கு உரையெழுதியும்; தமிழ் வளர்த்து அத் தமிழின் வழியாக மெய்யான இந்துமத மறுமலர்ச்சியெனும் சமுதாய மறுமலர்ச்சியை உண்டாக்கினார்கள், உண்டாக்கினார்கள், உண்டாக்கினார்கள்.

இந்த மூன்று பெரும் அரசியல்வாதிகளும் வாழையடி வாழையாக **'தமிழ் மொழியின் வளர்ச்சியே மெய்யான இந்துமதச் செழிச்சி'** என்றும்; **'மெய்யான இந்துமதச் செழிச்சியே தமிழர் சமுதாய மறுமலர்ச்சி'** என்றும்; **'தமிழ்ச் சமுதாய மறுமலர்ச்சியே தமிழ்நாட்டு அரசியல் உயர்ச்சி'** என்றும் செயல்வழிக் கருத்து விளக்கத்தை வழங்கினார்கள்.

அதாவது, '<u>மதவழிப் புரட்சியால்தான் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கும் விழிச்சியடையும், எழிச்சியடையும், செழிச்சியடையும், கிளர்ச்சிமிகு வளவளர்ச்சி பெறும், புரட்சிமிகு வளவளர்ச்சி பெறும், விடுதலையுணர்வு மிக்க ஆட்சி பெறும், ......</u>' என்ற உலகப் பேருண்மையைத்தான் மேற்படி மூவரும் தங்களுடைய வாழ்வியல் போதனையாலும், சாதனையாலும் நிலைநாட்டிக் காட்டினார்கள்.

இது பற்றி மூவர் தோற்ற உரையாசிரியர்கள், மேற்படி மூவரும் (காவிரியாற்றங்கரைக் கருவூரூர், கருவூர்த் தேவர், திருமாளிகைத் தேவர்) சாத்திர ஆசிரியரும், சந்தானுச்சாரியார் பீடமுமான அருள்நந்தி சிவாச்சாரியாரைப் பயன்படுத்தித்தான் அரசர்களைக் கற்கோயில்கள் கட்டுமாறும், கவிஞர்களைச் சொற்கோயில்கள் கட்டுமாறும் செய்தார்கள், செய்தார்கள், செய்தார்கள் என்று எழுதும் குறிப்புதான் அருள்நந்தி சிவாச்சாரியார் அவரது காலத்தில் எத்தகைய அரிய பெரிய தலைமை நிலையையும், முதன்மை நிலையையும், மேன்மை நிலையையும் பெற்றிருந்தார் என்ற பேருண்மையை விளக்குகின்றது.

இன்னும் சொல்லப் போனால், அருள்நந்தி சிவாச்சாரியாரால்தான் கோயில்களின் அமைப்பு முறை; கோயில் அலுவலக நிறுவனங்கள்; கோயில் நிருவாக முறைகள்; கோயிலில் கொண்டாடப்படும் திருநாள்கள், விழாக்கள்; கோயிலில் வளர்ந்த சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, நடனக் கலை, மருத்துவக் கலை; தமிழ்ப் புலமை வகுப்புக்கள், பிற அறிவியல்களையும் கலைகளையும் கற்றுத் தரும் கல்விச் சாலைகள்; ஊர்ப் பஞ்சாயத்து முறை, நீர்ப்பாசனத் திட்டங்கள், தொழில் வளங்கள், மெய்யான அருட்கல்வி, .... முதலியவை அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசில் நல்ல கட்டமைப்புக்களையும் ஒழுங்கான செயல்திட்டங்களையும் பெற்றிட்டன, பெற்றிட்டன, பெற்றிட்டன.

**‘அருள்நந்தி சிவாச்சாரியாரே பிற்காலச் சோழப் பேரரசின் நிலேயான சாசனம்’** என்று தோத்திரச் சாத்திர உரையாசிரியர்களும் குறிக்கும் ஒரே மாதிரியான கருத்து வாசகம்தான் அருள்நந்தி சிவாச்சாரியாரை பதினோராவது, பன்னிரண்டாவது நூற்றுண்டுகளின் ஒப்பற்ற தலேவர் என்று விளக்குகின்றது. இன்னும் சொல்லப் போனுல் இவரது காலம் கி.பி.1060 முதல் கி.பி.1282 முடிய நீண்டு கிடப்பதால் இவர்தான் பதின்மூன்ரும் நூற்றுண்டிற்கும் தலேவர் என்று கூறினுல் அது மிகையாகாது.

“இப்படி மூன்று நூற்றுண்டுகளுக்கும் உரிய ஒப்புயர்வற்ற, ஈடு இணேயற்ற அறிவியல் மேதையாகவும், அருட்செல்வராகவும், சாத்திர ஆசிரியராகவும், சந்தாஞச்சாரிய பீடமாகவும் விளங்கிய சைவ சித்தாந்தச் செல்வரான அருள்மிகு அருள்நந்தி சிவாச்சாரியார் அவர்களே **மெய்யான இந்துமத**த்தின் சுருங்கிய வடிவாக வாழும் சைவ சித்தாந்திகளும், சைவ சித்தாந்த மடாதிபதிகளும், பீடாதிபதிகளும் மறந்திருப்பதுதான் வேதனே, வேதனே, வேதனே; தமிழினத்துக்கு வந்த சோதனே, சோதனே, சோதனே, .... எனவேதான் அருள்நந்தி சிவாச்சாரியாரின் புகழ் பரப்புவதுதான் **மெய்யான இந்துமத**த்துக்குரிய சாதனே, சாதனே, சாதனே, ....” என்று இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்த சித்தர் கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளே அவர்கள் தமிழகத்து மதவாதிகளுக்கும், மதத் தலேவர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும், தமிழின ஆச்சாரியார்களுக்கும், குருபீடங்களுக்கும் விடுத்த அறிவிப்பு அழைப்பு வேண்டுகோளே பயனின்றிப் போயிற்று என்பதை எண்ணியெண்ணிப் பார்த்தோம்.

எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் இரண்டாவது தலேவராகப் பொறுப்பேற்ற சித்தர் காகபுசுண்டர் வழிவந்த முடிகணத்து (இன்றைய திருச்சி மாவட்டத்துக் கரூர் வட்டத்திலுள்ள முடிகண்ட சோழபுரம்) காக்காவழியன் பண்ணேயாடி சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமிப்

பிள்ளையாகிய யாம் **'சைவ சித்தாந்த சாத்திர ஆசிரியர்கள்'** என்ற தலைப்பிலும், **'சைவ சமயச் சந்தானுச்சாரியார்கள்'** என்ற தலைப்பிலும்; **'சைவ சமயக் குருபீடங்கள்'** என்ற தலைப்பிலும், **'சைவ சமயம் காத்த அருட்பேரரசர் நால்வர்'** என்ற தலைப்பிலும்; **'<u>மெய்யான இந்துமதத்</u>தை வடிவப் படுத்திக் காட்டிய சந்தானுச்சாரியார்கள்'** என்ற தலைப்பிலும்; **'<u>மெய்யான இந்துமதத்</u>துக்கும் *பொய்யான ஹிந்துமதத்*திற்கும் நிலையான ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கிய சந்தானுச்சாரியார்கள் நால்வர்'** என்ற தலைப்பிலும்; **'தமிழினத்திற்கும் பிருமணருக்கும் இடையே நிகழ்ந்து வரும் தத்துவப் போர்களின் தளபதிகளுள் நால்வர்'** என்ற தலைப்பிலும்; **'மெய்யான இந்துமதத்தை புரிந்து கொள்ள நான்கு சாத்திர ஆசிரியர்கள்'** என்ற தலைப்பிலும்; **'மெய்யான இந்துமதத்தின் அறிவியல் மேதைகள் நால்வர்'** என்ற தலைப்பிலும், ...... எண்ணற்ற கட்டுரைகளையும், சொற்பொழிவுகளையும், உரையாடல்களையும் நிகழ்த்தி வந்தோம்.

இருந்தும் தூங்கிக் கொண்டிருக்கக் கூடிய தமிழர்களைத் தட்டியெழுப்ப முடியவில்லை; வடஆரிய மாயையில் சிக்கிக் கலங்கிக் குழம்பித் தவித்திடும் தமிழர்களை அம் மாயையிலிருந்து விடுவிக்க முடியவில்லை, விடுவிக்க முடியவில்லை, விடுவிக்க முடியவில்லை. சமசுக்கிருத மொழிக்கும், வடஆரிய வேத மதத்துக்கும், பிருமணப் பண்டிதர்களுக்கும் அடிமையாகிக் கிடக்கின்ற சைவ சித்தாந்த மடாதிபதிகளையும், பீடாதிபதிகளையும், குருபீடங்களையும், புலவர்களையும், பத்தர்களையும் திருத்த முடியவில்லை.

எனவேதான் யாம், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் கனவை நனவாக்கத் தன்னை ஈன்ற தந்தையையும், தானீன்ற மகவையும் பிரிந்தும் கூட தளராமல் தொடர்ந்து தமிழர் வாழ்வைப் பாதுகாப்பதற்காக **மெய்யான இந்துமத**த்துக்கு அரணாக

கற்கோயில்களும், சொற்கோயில்களும் கட்டிய மாபெரும் அருளுலகச் செயல்வீரரான சித்தர் கருவூர்த் தேவரின் வரலாற்றை எழுதப் புகுந்தோம்.

அதாவது, **'<u>மெய்யான இந்துமதம்</u> காத்த கருவூர்த் தேவர் வரலாறு'** என்ற எமது நூலில் **மெய்யான இந்துமத**த்தின் இரண்டாவது சந்தானுச்சாரியாரும், பதினான்கு சைவ சமய, சைவ சித்தாந்தச் சாத்திர ஆசிரியர்களுள் தலை சிறந்தவருமான அருளுலக அறிவியல் மேதை அருள்மிகு அருள்நந்தி சிவாச்சாரியாரைப் பற்றிய செய்திகளை கணிசமான அளவு இந்த நூலில் தந்திருக்கிறோம். எனவே, இந்த நூலிலேயே அவர் எழுதிய **சிவஞான சித்தியார்** பற்றியும், **இருபா இருபது** பற்றியும் ஒரு மின்னல் வீச்சுக் கருத்து விளக்கம் வழங்கியிருக்கிறோம்.

அடுத்து மாபெரும் இடிபோல் பிற்காலச் சோழப் பேரரசு பற்றிய எமது ஆங்கில நூல்களையும், தமிழ் நூல்களையும் வெளியிட உள்ளோம். அவற்றுள், <u>The Fall and Rise of the Tamils</u>, <u>The Rise and Fall of the Tamils</u>, <u>The Religious Renaissance of the Later Cholas</u>, <u>The Renaissance of the Tamil Literature during the Later Chola period</u>, <u>The short note on the Later Chola dynasty</u>, <u>The hereditary of the Indu Gods</u>, <u>The Divine Theory of the Tamil Polity</u>, <u>The Temple Science of the Later Cholas</u>, <u>The Revolution of the Arts in the Later Chola period</u>, ..... என்ற நூல்கள் குறிப்பிடத் தக்கவை.

இவை எழுதுவதற்காக, இந்தத் தலைப்புக்களில் யாம் தொகுத்து வைத்துள்ள 'தமிழ்க் குறிப்புக்கள்' (The Collections of Information and particulars in Volumes) என்பவை குறிப்பிடத் தக்கவை. இவை பல தொகுதிகளாகத் தொகுக்கப் பட்டு பல நகல்கள் எடுக்கப் பட்டு பல நண்பர்களுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன.

இந்தக் குறிப்புக்களைத் '**<u>தமிழின வீழ்ச்சியும் எழுச்சியும்</u>**', '**<u>தமிழின எழுச்சியும் வீழ்ச்சியும்</u>**', '**<u>தமிழ்ப் பண்பாட்டு எழுச்சியும் வீழ்ச்சியும்</u>**', '**<u>தமிழ்ப் பண்பாட்டு வீழ்ச்சியும் எழுச்சியும்</u>**', '**<u>தமிழக அரசியல் தத்துவத்தில் தெய்வீகக் கொள்கை</u>**', '**<u>இந்துமதக் கடவுள்களின் பாரம்பரியம்</u>**', '**<u>பிற்காலச் சோழப் பேரரசில் இலக்கிய மறுமலர்ச்சி</u>**' .... என்று சில குறிப்பிட்ட தலைப்புக்களின் கீழேயே வகுத்துப் பகுத்துத் தொகுத்துச் சென்றிருக்கிறோம் யாம்.

ஏனென்றால் யாம் எழுதிய நூல்கள் அனைத்தும் வெளி வராவிட்டாலும்; எனக்கு விவரம் தெரிந்த இளமைப் பருவத்திலிருந்து யாம் சேகரித்து வைத்து விட்டுச் செல்லும் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் மட்டும் 20, 30 தொகுதிகளாக அச்சிடப் பட்டு வெளியிடப் பட்டிட்டால்தான் தமிழின விடுதலைக்குத் தேவையான **தமிழ்மொழி வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு** (The History of the Tamil Language and Literature), **தமிழ்ச் சமுதாய வரலாறு** (The Social History of the Tamils), **தமிழ்ப் பண்பாட்டு, நாகரீக வரலாறு** (The History of the Tamil Culture and Civilization), **தமிழ் அரசியல் வரலாறு** (The History of the Tamil Polity or the Political History of the Tamils), **தமிழரின் சமய வரலாறு** (The Religious History of the Tamils), **பதினெண்சித்தர்கள் தரும் உலக வரலாற்றுச் செய்திகள்** (The contributions of the Pathinensiddhars to the History of the World), **பதினெண்சித்தர்களின் தத்துவமும் சித்தாந்தமும்** (The Philosophy and the Theology of the Pathinensiddhars), **பதினெண்சித்தர்களின் சமய விஞ்ஞானம்** (The Religious Science of the Pathinensiddhars), **பதினெண்சித்தர்களின் சமுதாய விஞ்ஞானம்** (The Social Science of the Pathinensiddhars), **பதினெண்சித்தர்களின் கோயில் விஞ்ஞானம்** (The Temple Science of the PathinenSiddhars), ..... முதலிய நூல்கள் எல்லாம் உருவாக்கிட முடியும், உருவாக்கிட முடியும், உருவாக்கிட முடியும். அல்லது இந்தத் தலைப்புக்களில் எல்லாம் சிந்திக்கக்

கூடிய ஆற்றலைப் பெற்ற தலைவர்கள் தமிழினத்துக்குக் கிடைத்திடுவார்கள்.

இல்லாவிட்டால் கடந்த இரண்டு நூற்றுண்டுகளில் தமிழினத்திற்குக் கிடைத்த பெரும்பாலான தலைவர்கள் தற்குறிகளாகவும், தான் தோன்றிகளாகவும், அரைகுறைப் படிப்பாளிகளாகவும், சிந்திக்க மறுத்த குருடர்களாகவும், பிறரோடு கலந்து பழகத் தெரியாத திருடர்களாகவும், அடிதடி நிகழ்த்தும் முரடர்களாகவும், முதலாளித்துவ கைக்கூலிகளாகவும், கள்ளச் சந்தைக்காரர்களின் சொந்தக்காரர்களாகவும், கொள்ளைக்காரர்களின் கூட்டாளிகளாகவும், வறட்டுத் தத்துவ வாதிகளாகவும், முரட்டுப் பிடிவாதக்காரர்களாகவும், அன்னியர்களின் கங்காணிகளாகவும், பதவி வெறியர்களாகவும், புகழ் வெறியர்களாகவும், பேராசைக்காரக் கூலிக்காரர்களாகவும், ...... வாழ்ந்திட்டது போலவே வருங்காலத் தமிழினத் தலைவர்களும் வாழ்ந்திடுவர்.

எனவே தமிழினத்துக்கு மட்டும் தலைவர்களாகப் பதினெண்சித்தர்களை எண்ணுமல் இம்<u>மண்ணுலக மனித இனங்கள் அனைத்திற்குமே தலைவர்களாகப் பதினெண்சித்தர்களை எண்ண வேண்டும்</u>. அப்பொழுதுதான் உலகச் சமத்துவம், உலகச் சகோதரத் தத்துவம், உலகச் சமாதானம், உலக ஒற்றுமை, உலக அமைதி, உலக நல்லுறவு, உலகப் பொதுவுடமை, உலகக் கூட்டுறவு, உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு, உலக மானுட விடுதலை, உலக மனித உரிமை, .... முதலியவைகள் எல்லாம் **கனவு** நிலைகளைக் கடந்து **நனவு** நிலைகளை அடைந்திடும். எனவே, கருவூர்த் தேவரை ஏற்றுக் கொள்ளத் தயங்கினுலும், அருள்நந்தி சிவாச்சாரியாரையாவது ஏற்றுக் கொள்ளத் தயாராகட்டும் இந்தத் தமிழகம்.

ஏனெனில், **தமிழர்களுக்கு மிகுந்த தீமைகளை இழைத்து வந்திட்ட <u>பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள்</u> இனிமேலும் தனித்த ஓர் இனமாக வாழாமல், அனைத்து வகையான தனித் தன்மைகளையும் அகற்றி விட்டுத் தமிழினத்தோடு இரண்டறக்**

**கலந்து ஒன்றுகிடக் கூடிய பொற்காலம்** அருள்நந்தி சிவாச்சாரியாரின் போதனைகளிலும் சாதனைகளிலும்தான் இருக்கின்றது.

**//இதன் மூலம்: அச்சிட்ட குருதேவர் அறிக்கைகள் 35, 36, 37 ஆகியவைகளில் இதே தலைப்பில் வெளியாகிய கட்டுரை.//**

# தமிழின விடுதலைப் போர்

# சந்தானுச்சாரியார் வரலாறு = மெய்யான இந்துமத வரலாறு

**(நூல் விளக்கம் = நூல் அறிமுகம்)**

"**தமிழின விடுதலைப் போர்த் தளபதிகளே சமயாச்சாரியார்களும், சந்தானுச்சாரியார்களும்** ஆவார்கள். இப்படையிலுள்ள **துணைச் சேனைத் தலைவர்களே நாயன்மார்களும், ஆழ்வார்களும்**. இவர்களின் **போர்க் கருவிகளே இவர்கள் பாடிய பாடல்கள்** அல்லது படைத்த இலக்கியங்கள். இவர்களுடைய **பாடிவீடுகளே** இவர்கள் தனித்தனியாகப் பூசை செய்த, **இவர்களின் விருப்பத்திற்குரிய தெய்வங்களின் கோயில்கள்**. இந்த மாபெரும் விடுதலைப் போருக்காக உருவாக்கப் பட்ட **பாசறைகளே அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்கள்**. இந்த விடுதலைப் போருக்காக **வகுக்கப்பட்ட வியூகச் சாத்திறங்களும், அத்திர சாத்திரங்களும்தான் குலதெய்வக் கோயில் முதல் மிகப்**

**பெரிய ஆலயங்கள், திருப்பதிகள் முடிய நிகழக் கூடிய விழாக்களும், பூசைகளும்**. தமிழினத் தத்துவ வேந்தர்களான **பதினெண்சித்தர் பீடாதிபதிகளே முடிசூடிய அரியாசன மாமன்னர்கள்** என்பதால்; அவர்கள் தோன்றும் காலங்களிலேதான் தமிழின விடுதலைப் போர் நிகழுகிறது. "இம்மண்ணுலகின் மூலவர்களாகவும், முதல்வர்களாகவும், தலைவர்களாகவும், தத்துவ நாயகர்களாகவும், மதத்துறையின் விதைப் பண்ணைகளாகவும் இருக்கின்ற தமிழர்கள்; விழிப்புணர்வும், தன்னுணர்வும், இன உணர்வும், மொழி உணர்வும் இல்லாத காரணத்தினால் மீண்டும் மீண்டும் அடிமைப்பட்டு 48 முறைகள் விடுவிக்கப் படுவார்கள்" என்று குருபாரம்பரியம் கூறுகின்றது. ஆனால், இவர்கள் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்திலேயே முழுமையான விடுதலையைப் பெற்று விடுவார்களேயானால்; அந்த விடுதலையைப் போற்றிப் பேணி வளர்ப்பவர்களாகத்தான் மற்ற (முப்பத்தாறு) 36 பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் இருந்திடுவார்கள் என்ற செய்தியையும் குருபாரம்பரியம் குறிக்கின்றது. எனவேதான், சித்தர் காகபுசுண்டர் எனப்படும் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளையாகிய யாம்; பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி நிதானத்தோடும், சமாதானப் போக்கோடும் 'எண்ணப் புரட்சி', 'கருத்துப் புரட்சி', 'சிந்தனைப் புரட்சி', .... என்று உணர்வுப் புரட்சிகளைச் செய்து தமிழின விடுதலைப் போரை நிகழ்த்துவதற்காகத்தான் **'தமிழின விடுதலைப் போர்'** என்ற தலைப்பில் பல நூல்களை எழுதியிருக்கிறோம். அதில் ஒன்றே இந்நூல்."

[**'மெய்யான இந்துமதம் காத்த கருவூர்த் தேவர் வரலாறு'** அல்லது **'சந்தானுச்சாரியார் வரலாறு = மெய்யான இந்துமத வரலாறு'** என்ற நூலுக்கு எழுதப் பட்ட முன்னுரையிலிருந்து எடுக்கப் பட்டது.]

**//இதன் மூலம்: அச்சிட்ட குருதேவர் அறிக்கை 39இல் இதே தலைப்பில் வெளியாகிய கட்டுரை.//**

# உண்மையிலே இந்துமதத்தில் வீழ்ச்சி நிலையா?

இந்துமதம் விழிச்சி! எழுச்சி! செழிச்சி! பெற்றிடுமா!?!?!?

தமிழின மொழி விடுதலையே இந்து மத விடுதலை.

மத மறுமலர்ச்சியே சமுதாய அரசியல் புரட்சிகளை நிகழ்த்தும்.

மதவாதிகளின் இலக்கிய வரலாற்று அறிவே விடுதலைப் போர் ஆயுதங்கள்.

கல்வியறிவும் கேள்வியறிவுமே மதவாதிகளின் கண்கள்!

இப்படிக் குருபாரம்பரியத்தில் வினாக்களும் விடைகளும் நிறைய உள்ளன. ..... இவற்றால் பிறந்த சிந்தனை...

1. **‘<u>மதம்</u>’** என்றாலேயே வளத்தின் மிகுதி! வலிமையின் உச்ச நிலை! மானுட ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டது! .... என்ற பொருள் தெளிவாகிறது.

2. **‘<u>இந்து</u>’** என்றாலேயே அனைத்துக்கும் ஆரம்பம், மூலம், கரு, தாய், தொன்மையானது, பழமையானது, உயரியது, அரியது, பெரியது, சிறந்தது, அழியாதது, .... என்ற எண்ணற்ற பொருள்கள் புரிகின்றன, விளக்கமாகின்றன; நினைவுக்கு வருகின்றன.

3. **‘<u>தமிழிலக்கியங்கள்</u>’** என்றாலேயே இந்த மண்ணுலகம் விண், வான், ஆகாயம், பரவெளி, பாழ்வெளி, முற்பிறப்பு, ஆவி, ஆன்மா, ஆருயிர் முதலிய அனைத்துக்குமே விளக்கம் தரக் கூடியன என்ற உணர்வு வருகிறது.

4. இத்தகைய சிறப்பு மிக்க தமிழகத்திலே <u>எல்லாக் கோயில்களிலுமே பூசை நேரங்களில் கூட்டம் நிரம்பி வழிகின்றது</u>; பொதுவாகத் தமிழக மக்கள் தனிமனிதர் கொண்டாடும் ‘நோன்புகள்’, நிகழ்த்தும் ‘சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகள்’; குடும்பத்தார் கொண்டாடும் ‘திருநாள்கள்’; சமுதாய அளவில் கொண்டாடிடும் ‘திருவிழாக்கள்’ ..... முதலிய அனைத்தையுமே நம்பிக்கையோடும், விருப்பத்தோடும், பற்றோடும், பாசத்தோடும்; உறவினரோடும், ஊராரோடும் கூடிக் குலாவிக் குதூகலித்துத்தான் கொண்டாடுகிறார்கள்.

ஆனால், ஏறத்தாழப் <u>பெரும்பாலானவர்களுக்கு நமது மதத் தத்துவங்கள், செயல் சித்தாந்தங்கள், வரலாறுகள், இலக்கியங்கள், மதப் பெரியார்களின் சாதனைகள், போதனைகள், .... முழுமையாகவே தெரியாத நிலைதான் இருக்கிறது</u>. மீதமுள்ள சிறுபான்மையினருக்கும் மேற்படிச் செய்திகள் அரைகுறையாகத்தான் தெரிந்திருக்கின்றன. எனவேதான், நமது மதத்தின் மலர்ச்சி நிலை, வளர்ச்சி நிலை, பயிற்சி நிலை, செழிச்சி நிலை, ...... முதலிய அனைத்துமே தளர்ச்சியுற்றுக் கிடக்கின்றன. இவற்றை யெல்லாம் போக்குவதற்காகத்தான், இன்றைக்கு

'மத மறுமலர்ச்சி இயக்கம்', 'மதச் சீர்திருத்த இயக்கம்' ..... முதலியவை தேவைப் பட்டுள்ளன.

5. **நம்மவர்கள் பூசைப் பொருள்களும், படையல் பொருள்களும் எடுத்துக் கொண்டு மட்டும் கோயில்களுக்குச் செல்வது மாறி; எல்லோருமே கையில் புத்தகத்துடன் செல்லுகின்ற காலம் வர வேண்டும்**. கோயில்களில் பூசாறி .... முதலாக உள்ள நாற்பத்தெட்டு வகையான ஊழியக்காரர்களும் கோயிலில் நடைபெறும் (1) விரிவுரை, (2) அருளுரை, (3) சொற்பொழிவு, (4) பட்டிமன்றம், (5) கருத்து விளக்க வாதம், (6) பூசாமொழி ஓதுவித்தல் ..... முதலியவற்றில் பங்கு பெற்றிடல் வேண்டும்.

அதனால், மத அறிவு (Religious Knowledge) உடையவர்களாக அனைத்து வகையான கோயில் ஊழியர்களும் தயாராகிடுவார்கள். அதனால், கோயில் வழிபாட்டுக் கூடமாக மட்டும் செயல்பட்டிடாமல், அறிவு வளர்க்கும் ஞானப் பள்ளியாகவும் தயாராகிடும். அப்பொழுதுதான், **மதமே குடும்பமாகிடும், சமுதாயமாகிடும், அரசியலாகிடும்; அதன் பயனாக எதிர்பார்த்திடும் மத மறுமலர்ச்சி, மத வளவளர்ச்சி, மத ஆட்சி மீட்சி, .... முதலியவை உருவாகிடும்**.

**தத்துவ நாயகம், அருளாட்சி நாயகம்,**
**தமிழினக் குருபீடம், இந்துமத ஆச்சாறியார்,**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.**

-----------------------------

**//இதன் மூலம்: அச்சிட்ட குருதேவர் அறிக்கை 48இல் இதே தலைப்பில் வெளியாகிய கட்டுரை.//**

# “இந்துமத எழுச்சி வாசகம்”

## [ஒரு வரி வாசகம்]

## ‘பிற்காலச் சோழப் பேரரசை உருவாக்கிய உயரிய உயிர் வாசகங்கள்’ என்று சித்தர் ஏளனம்பட்டியார் தொகுத்தவை.

மொழியுரிமைகளைப் பேணுவது இந்துமதமே.
இன விடுதலைகளைப் போற்றுவது இந்துமதமே.
நாட்டுத் தன்னாட்சிகளைக் காப்பாற்றுவது இந்துமதமே.
மொழிச் சமத்துவத்தை வளர்ப்பது இந்துமதமே.
இனச் சமத்துவத்தை வளப்படுத்துவது இந்துமதமே.
நாட்டுச் சமத்துவத்தை வலிமையாக்குவது இந்துமதமே.
சமுதாயச் சமத்துவத்தை அடிப்படையாக உடையது இந்துமதமே.
சமுதாயப் பொதுவுடமையை நியாயப்படுத்துவது இந்துமதமே.
சமுதாயக் கூட்டுடமையை நீதியாக்குவது இந்துமதமே.
மொழி ஆதிக்கத்தைக் கண்டிப்பது இந்துமதமே.
மொழிச் சர்வாதிகாரத்தை ஒழிக்கக் கூறுவது இந்துமதமே.
மொழி எதேச்சாதிகாரத்தை மறுத்தழிக்கச் செய்வது இந்துமதமே.
மொழிச் சுரண்டலை வெறுத்தகற்ற ஆணையிடுவது இந்துமதமே.
மொழிகளின் செழுச்சியை விழியாகப் போற்றுவது இந்துமதமே.
தாய்மொழி காத்தலே இறை வழிபாடென்று கூறுவது இந்துமதமே.
தாய்மொழியைச் சிறப்பாகப் பயிலலே பத்தியென்பது இந்துமதமே.
தாய்மொழியை வளப்படுத்துவது அறமென்பது இந்துமதமே.

தாய்மொழிக்காகப் போராடுவதே தவமென்பது இந்துமதமே.
தாய்மொழி வழிப் பூசையே சிறந்த சித்திகளைத் தருமென்பது இந்துமதமே.
தாய்மொழியே முன்னோர்களையும் மூத்தோர்களையும் உணர்த்துவது என்பது இந்துமதமே.
தாய்மொழியே உய்வுகளை மெய்மைப்படுத்தும் என்பது இந்துமதமே.
தாய்மொழியே இனப் பகையொழித்துத் தருமென்பது இந்துமதமே.
தாய்மொழியே நாட்டுரிமை பெற்றுத் தருமென்பது இந்துமதமே.
தாய்மொழியே நாட்டுப்பற்றை வளப்படுத்துமென்பது இந்துமதமே.
தாய்மொழியே சமுதாய ஒற்றுமையை வலிமையாக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே மனிதப் பண்பை வளர்க்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே நெஞ்ச ஈரத்தைக் காக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே சிந்தை வீரத்தை வலிமையாக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே செயல் தரத்தை வளமாக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இனிமையும் கனிவும் விளைவிக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே பணிவும் துணிவும் கிளைக்க வைக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இன உணர்வு தழைக்கச் செய்யுமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இன ஒற்றுமையை வலிமையாக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இனப்பற்றைச் செழித்தோங்கச் செய்யுமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இன உரிமையைப் பேணுமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இன உரிமையைக் காக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இன விடுதலைப்போரை நிகழ்த்துமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இனக் கட்டுப்பாட்டைத் தருமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இனத் தனித்தன்மையைக் காக்குமென்பது இந்துமதமே.

தாய்மொழியே இனவிழிச்சி நிலையைப் பேணுமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இனச் செழுச்சியைப் போற்றுமென்பது இந்துமதமே.
தாய்மொழியே இன எழுச்சியை வித்திட்டு விளைவிக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே நாட்டுணர்வை வடிவப் படுத்துமென்பது இந்துமதமே.
தாய்மொழியே நாட்டுப்பற்றைச் செழுமைப்படுத்துமென்பது இந்துமதமே.
தாய்மொழியே நாட்டுத் துன்பங்களுக்கு விடிவளிக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே நாட்டுத் துரோகிகளுக்கு முடிவளிக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே நாட்டு விரோதிகளை அடியோடு அழிக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே சமுதாயச் சமத்துவம் காக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே அரசியல் பொதுவுடமையை உருவாக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே சமய ஒற்றுமையை விளைவிக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே ஆன்மநேய ஒருமைப்பாடு நல்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே அரிய ஆன்மீக இன்பம் நல்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே கூரிய அறிவை வளர்க்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே சீரிய நோக்கைப் பேணுமென்பது இந்துமதமே.
தாய்மொழியே பெரிய போக்கைக் காக்குமென்பது இந்துமதமே.
தாய்மொழியே நேரிய பண்பை நல்குமென்பது இந்துமதமே.
தாய்மொழி வழிக் கல்வியே உண்மை அறிவு தருமென்பது இந்துமதமே.
தாய்மொழிப் புறக்கணிப்புத் தற்கொலைக்குச் சமமென்பது இந்துமதமே.
தாய்மொழித் தாழ்ச்சி இன வீழ்ச்சியென்பது இந்துமதமே.

... என்பன போன்ற **ஒருவரி வாசகங்களை எண்ணற்று ஓலைகளில் எழுதிப் பொதுமக்களிடம் கொடுத்துப் படிக்கச் செய்துதான் 'அருட்பேரரசு' அமைத்தார் குருமகாசன்னிதானம் காவிரியாற்றங்கரைக் கருவூரார்**.

இவர், பதிஞோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகச் செயலாற்றத் துவங்கிய போது தமிழர்கள் பாலிமொழி, பிருகிருத மொழி, சமசுக்கிருத மொழி ... எனப் பிறமொழிகளுக்கு அடிமையாகிக் கிடந்தனர். தமிழர்கள் தாய்மொழிப் பற்றில்லாமல் தமிழ்த் துரோகிகளாகவும், விரோதிகளாகவும், மறுப்பாளர்களாகவும், வெறுப்பாளர்களாகவும், தமிழ்ப் பகைவர்களாகவும், பிறமொழி அடிமைகளாகவும், பிறமொழிக்காரர்களின் கூலிகளாகவும், பிறமொழிக் காரர்களின் கங்காணிகளாகவும் ... செயல்பட்டிட்டார்கள்.

அப்படிப்பட்ட இழிநிலைகளை, பழிநிலைகளை, அழிநிலைகளை எல்லாம் தாய்மொழிப் பற்றும், பாசமும், அன்பும், ஆர்வமும், ஈடுபாடும், நாட்டமும் தமிழர்களுக்கு ஊற்றெடுக்குமாறு செய்துதான் மாற்றியமைத்தார் தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய பதிஞோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார். **இவர் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் இன்னும் நிற்கிறது**. **ஆனால், இவர் தமிழர்களுக்கு ஊட்டிய தாய்மொழிப் பற்றும், தன்மானப் பற்றும், நாட்டுப்பற்றும், இனப்பற்றும் ... தரைமட்டமாகி விட்டன**.

தமிழன், தாய்மொழியை அடகு வைத்தும், காட்டிக் கொடுத்தும், கூட்டிக் கொடுத்தும், அடிமைப் படுத்தியும் ... தன்னலம் கொண்டு வாழும் பேராசை வெறிபிடித்த வாழ்க்கையை யாரால் திருத்த முடியும் இனி?!?!?!?!?!?!?

தமிழனுக்குப் பகைவன் தமிழ்மொழி விரோதியாகவும், துரோகியாகவும் வாழும் தமிழ்மொழிப் பற்றில்லா ஈனப்பிறவிதான்.

“தகப்பன் பெயர் தெரியாமல் வாழ்பவனை விடத் தாய்மொழிப் பற்றில்லாமல் வாழ்பவன்தான் இழிந்தவன், அவமானத்துக்கு உரியவன்”.

அரசியலில் அன்னியருக்குக் கங்காணியாய், எடுபிடியாய், கூலியாய், அடிமையாக வாழும் மானங்கெட்ட தமிழர்கள் பேராசை கொண்டு நாயாய் அலைகிறார்கள். இவர்கள் பதவி, பணம், புகழ் ஈட்ட எந்தத் துரோகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். இவர்கள், தாயையே விலைக்கு விற்கும் கயவர்களை விடக் கொடியவர்கள், கேடுகெட்டவர்கள், அற்பர்கள். இவர்கள் தங்களுக்குப் பதவி, பணம், புகழ் கிடைப்பதற்காகத் தாய்மொழிப் பற்றை விற்று விட்டுத் தாய்நாட்டை அடிமைப் படுத்திடக் கங்காணி வேலை செய்யும் குடிகேடர்கள்!

இவர்களை இந்துமதத்தால்தான் திருத்தி நல்வழிப் படுத்த முடியும். **அண்டபேரண்டங்களையும், பிண்டங்களையும் அடக்கியாளும் அமுதத் தெய்வத் தமிழுக்குத் துரோகிகளும், விரோதிகளும் தமிழர்களிலேயே தோன்றாமல் தடுக்கும் ஆற்றல் இந்துமதத்துக்குத்தான் உண்டு**.

ஏனெனில், பதினெண்சித்தர்கள் இந்துமதத்தைத் தமிழ்மொழியில்தான் வெளியிட்டுள்ளார்கள். இந்துமதத்தைத் தமிழர்கள் தெரிந்தும், புரிந்தும், தெளிந்தும், உணர்ந்தும், உண்மையான இந்துவாக வாழ்ந்து அருளை அநுபவப் பொருளாகப் பெற்ற பிறகுதான் தமிழின் அருமை பெருமைகளை உணருவார்கள். அதற்காகவே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவிக்கிறேன் நான்.

பதினெண்சித்தர் பீடாதிபதியாக இல்லாவிட்டாலும், பத்தாவது பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளைப் போல் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவிக்கிறேன் நான். ஏனெனில், **இந்துமதம் மறுமலர்ச்சி அடைந்தால்தான் தமிழ்மொழி செழுச்சியடையும், ஆட்சியுரிமை பெறும், தமிழினம் விடுதலை பெறும், தமிழர்கள் தன்மானத்தோடும், ஒற்றுமையோடும் வாழுவார்கள்.** தமிழர்களைத்

தாய்மொழிப் பற்றும், பாசமும், நம்பிக்கையும் உள்ளவர்களாக்கித் தமிழின விடுதலையை விளைவிக்கவே இ.ம.இ.யைத் தோற்றுவிக்கிறேன் நான்.

-- கண்டப்பக்கோட்டைச் சித்தர் கருவூரர்
உ. இராமசாமிப் பிள்ளை,
கி.பி.1772

இக்குறிப்பு இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர் காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து எடுக்கப்பட்டது.

<u>ஆதாரம்</u>:-

இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் கருவூரர்,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,
இ.ம.இ.யின் மூன்றுவது பாரம்பரியத் தலைவர்.

<u>நகல் எடுத்தவர்:-</u>

தலைமைப் பணியாளர், அருளுதி சிவசத்திகள் சன்னிதானம், சித்தர் மகன், சித்தரடியார் தெய்வீகாச்சாரியார், சோ.இரவீந்திரன் 29/4/84

//உண்மை நகல்//

**//இதன் மூலம்: சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்த கையெழுத்துப் பிறதி.//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

*__ஆதாரம்:__ மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.

இலக்கியங்களே முழுமையான, வளமான வரலாற்றுச் சான்றுகள்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com